திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, செங்கற்பட்டு வட்டத்தில், செங்கல்பட்டு தொகுதி என்பது, மிகவும் பின்தங்கிய தொகுதி. செங்கற்பட்டு வட்டத்தில் இரண்டு தொகுதிகள் இருக்கின்றன. அதிலே, செங்கற்பட்டுத் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான ஒரு தொழிற்சாலையும் அரசாலோ, தனி நபராலோ ஆரம்பிக்கப்படவில்லை. இங்கே மிக அருமையான கற்கள் கிடைப்பதால், ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தினால், அந்தக் கற்களை மெருகூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அதிக அந்நியச் செலா வணி ஈட்டுகின்ற நிலை ஏற்படும். அந்த வகையிலே, அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம், சம்பவ ராயர், வட ஆற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில், இந்தக் கல்லைக் கொண்டு போய் ஏற்றுமதி செய்வதற்கு, மெருகூட்டுகின்ற பணிகள் பல இடங்களில் நடைபெறுகின்றன. குறிப்பாக, செங்கை-அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மணலியில் இந்தத் தொழிற்சாலை இயங்கி வருகிறது. தனியாக ஒரு திட்டத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்கு இப்போது எந்த யோசனையும் செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைக் கொண்டு, அதுபற்றிப் பிறகு ஆராயலாம்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புலிக் குன்றம் தொகுதியிலே இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கிற கல்லின் அளவு எவ்வளவு? இதனால் அங்கே பயன்படுகின்ற தொழிலாளர்கள் எவ்வளவு? இப்போது அது லாபத்தில் இயங்கி வருகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இங்கே கல்லே எடுக்க வில்லை என்று கேள்வி கேட்டார். இப்போது, எவ்வளவு கல் அங்கே எடுக்கப்படுகிறது என்று கேட்கிறார். பொதுவாக செங்கை-அண்ணா மாவட்டத்தில், பரவலாக இந்தக் கற்கள் எடுக்கப்பட்டு, தொழில் நடைபெறுகிறது.

பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

* 4507—திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அரசு முதலீட்டில் பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை தஞ்சையில் அமைக்க அரசு முன் வருமா?

1990 ஏப்ரல் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சையில் பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் தொழிற்சாலை, குறிப்பாக, High Density Poly Propylene (HDPP) தொழிற்சாலை, தமிழகத்தில் மிகுந்த நலிந்த நிலையில் உள்ளது. இதற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற கச்சாப் பொருட்கள் Granules போன்றவைகளுக்குச் சலுகைகள் அளிப்பதற்கு, மத்திய அரசை, இந்த அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தேவை ஏற்படின், மத்திய அரசுக்குக் கோரிக்கை வைக்கும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் போடப்படும் ஆழ்துளைக் கிணறுகளுக்கு, இந்த பிளாஸ்டிக் பைப்புகள் உபயோகப்படுத்துகின்ற வகையில், தஞ்சையில் தொழிற்சாலை அமைப்பதறகு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக, நான் இதற்கு விடையளிக்க இயலாது. அதனுடைய தேவையை உணர்ந்து அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை தஞ்சையிலே அமைக்கலாமா என்பது குறித்துப் பின்னர்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, பிளாஸ்டிக் குழாய் தொழிற்சாலை, தஞ்சையிலே அமைக்கிற உத்தேசம் இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பிளாஸ்டிக் தேவை அதிகமாக அதிகரித்து வருவதால், வேறு எங்காவது தமிழ்நாட்டில் இந்தத் தொழிற்சாலை அமைக்கக்கூடிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

காலை 9.05

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடலூரில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு, அது மிகுந்த இழப்பீட்டுக்கிடையே நடைபெற்று இப்போது இந்த அரசு அதிலே சில மாற்றுத் திட்டங்களை உருவாக்கி, இலாபகரமாக அதை இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கின்ற தொழிற்சாலை தஞ்சை மாவட்டத்திலே அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தஞ்சையை, industrially most backward என்று அறிவித்திருக்கின்றார்கள். அதைப் பயன்படுத்தியாவது, தஞ்சையிலே பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பின் தங்கிய பகுதிகள் என்று அரசு அறிவித்துள்ள இடங்களை ஆங்காங்கு உள்ள தொழில் முனைவோர்கள்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயல்லாமல், அரசே அதைப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலாத காரியம்.

கைதிகள் செய்யும் வேலைகளுக்கு ஊதியம் வழங்குதல்.

*7042—பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைகளுக்கு அரசு வழங்கும் ஊதியத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம். ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது.

(ஆ) அரசாணை எண் 1287, உள் (சிறை 3) துறை, நாள், 11—7—1989-ல் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு ரூ. 1.00 என்றிருந்தது ரூ. 2.00 ஆகவும், அரைத் தேர்ச்சியடைந்தவர்கள் ரூ. 0.50 என்றிருந்தது ரூ. 1.00 ஆகவும், தேர்ச்சி அற்றவர்கள் ரூ. 0.25 என்றிருந்ததை ரூ. 0.50 ஆக மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டது.